**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 158/2016**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 18.08.2025 | தகப்பனார்/கணவர் பெயர்: | நாகப்பிள்ளை |
|---|---|---|---|
| பெயர்: | கோபாலகிருஷ்ணன் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | திருவாளி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 69/2025 |

**முதல் விசாரணை : 18.08.2025**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபன பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 26.12.2014 தேதியிட்ட எனது பெயரிலான பட்டா அசல் **வா.சா.ஆ. 1** ஆகவும்
2. 01.03.1992 தேதியிட்ட எனது சகோதரர் கோவிந்தராஜ் ராமதாசுக்கு எழுதிக் கொடுத்த சுத்த கிரய சாசன சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்
3. 07.06.1997 முதல் 15.03.2015 வரையிலான எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் (எண்ணிக்கை 6) **வா.சா.ஆ.3** ஆகவும்
4. 30.12.2014 தேதியிட்ட வில்லங்க சான்றின் அசல் **வா.சா.ஆ.4** ஆகவும்
5. கடந்த 23.02.2017 தேதியிட்ட பூம்புகார் காவல் நிலையத்தாரால் எனக்கு வழங்கப்பட்ட மனு ரசீது **வா.சா.ஆ.5** ஆகவும்
6. 29.05.2017 தேதியிட்ட புதுமனை புகுவிழா பத்திரிக்கை அசல் **வா.சா.ஆ.6**

ஆகவும்

7. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண். 153/1989 வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகவும்

8. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண். 153/1989 தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆகவும்

9. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண். 153/1989 தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகவும்

10. 10.06.1989 தேதியிட்ட மணி என்பவருக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆகவும்

11. 22.06.1989 தேதியிட்ட மணி என்பவர் அனுப்பிய பதில் அறிவிப்பு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆகவும்

12. இந்த வழக்கின் பிரதிவாதியின் தகப்பனார் நாராயணசாமி என்பவர் அ.வ.எண். 153/1989 – ல் கொடுக்கப்பட்ட சாட்சிய வாக்குமூலம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆகவும்

13. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண். 153/1989 வழக்கு பதிவேட்டின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.13** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.